# குழித்துறை நகர்மன்றத்தின் 04-08-2022 வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

## நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) நகராட்சி அலுவலக கட்டிடத்தின் பின்புறத்தில் உள்ள பழைய கட்டிடம் மற்றும் சுகாதாரப்பிரிவு கட்டிடம் ஆகியவற்றை இடித்து புது கட்டிடம் கட்ட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 178 - (1) தீர்மானிக்கப்பட்டது.

2) 75-வது சுதந்திரதின அமுதப்பெருவிழாவை முன்னிட்டு வேலுத்தம்பி தளவாய் திடலில் சுதந்திரதின நினைவு சின்னம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 178 - (2) தீர்மானிக்கப்பட்டது.

3) குழித்துறை நகராட்சி பகுதியில் உள்ள அரசு சுவர்களில் தனியார் சுவரொட்டி ஒட்டுவதை தடை செய்து மேற்படி சுவர்களில் குமரி மாவட்டத்தின் பாரம்பரியத்தை விளக்கும் ஓவியங்கள் மற்றும் பிளாஸ்டிக் தவிர்க்கப்பட வேண்டிய கட்டாயம் பற்றிய வாசகங்கள் பொறிக்கப்பட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 178 - (3) தீர்மானிக்கப்பட்டது.

4) வார்டு 19-ல் திரு. பத்மகுமார் அவர்களின் வீட்டு அருகாமையில் உள்ள மின்கம்பத்தில் C.F.L. விளக்கு பொருத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 178 - (4) தீர்மானிக்கப்பட்டது.

## நகர்மன்ற துணைத்தலைவர் திரு.மு.பிரபின் ராஜா கொண்டு வரும் தீர்மானம்

1) திருத்துவபுரம் முதல் கல்லுக்கெட்டி வரையுள்ள ஒடையை தூர்வாரி சீர் செய்து சிலாப் போட்டு மூட வேண்டிய இடங்களில் சிலாப் போட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 179 - (1) தீர்மானிக்கப்பட்டது

2) கல்லுக்கெட்டி சி.எஸ்.ஐ. சர்ச் ரோட்டில் ஜெம்பிஜி என்பவரின் வீட்டிற்கு அருகில் நிற்கும் மின்கம்பத்தில் ஒரு மின்விளக்கும், ஜெயின்ராஜ் அவர்கள் வீட்டின் முன்னால் ஒரு மின்விளக்கும், காட்டுவிளையிலிருந்து பாலவிளை செல்லும் ரோட்டில் செல்வராஜ் என்பவரின் வீட்டிற்கு முன்னால் நிற்கும் மின்கம்பத்தில் ஒரு மின்விளக்கும், காட்டுவிளையில் கனகராஜ் வீட்டின் முன்னால் ஒரு மின்விளக்கும் சேவியர் என்பவரின் வீட்டிற்கு முன்னால் ஒரு மின்விளக்கும் அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 179 - (2) தீர்மானிக்கப்பட்டது

<u>5-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.S. ஆட்லின் கெனில் கொண்டு வரும் தீர்மானம்</u>

1) 5-வது வார்டுக்கு உட்பட்ட ஆர்.சி. தெருவில் உள்ள படிப்பகம் செயல்படாமல் இருக்கின்றது. அதனை இளைஞர்கள் உடற்பயிற்சி செய்யும் வகையில் பெரிதாக கட்டி தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 180 - (1) தீர்மானிக்கப்பட்டது

2) 5-வது வார்டுக்கு உட்பட்ட வாட்டர்டேங்கிக்கு எதிரில் உள்ள சாலையில் 15 வீடுகள் உள்ளது. அந்த பகுதியில் தண்ணீர் குழாய் புதிதாகப்போட்டு சாலையில் தரைஓடு (இன்டர்லாக்) போட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 180 - (2) தீர்மானிக்கப்பட்டது

3) 5-வது வார்டுக்கு உட்பட்ட பி.எஸ்.என்.எல். கீழ் முருகன் அவர்களின் வீட்டிற்கு செல்லும் பாதையில் காங்கிரீட் உடைந்த நிலையில் காணப்படுகிறது. அந்த பகுதியிலும் தரை ஓடு (இன்டர்லாக்) போட்டுதர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 180 - (3) தீர்மானிக்கப்பட்டது

12-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கி.செ. ஜீலியட் மெர்லின் ரூத் கொண்டு வரும் தீர்மானம்

1) BOC தெருவில் ஏற்கனவே இருக்கும் குழாயில் வரும் தண்ணீர் அப்பகுதி மக்களுக்கு தட்டுப்பாடாக உள்ள காரணத்தால் புது பைப் லைன் அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 181 - (1) தீர்மானிக்கப்பட்டது

2) சிங்கிளேயர் தெருவில் அப்பு ஜாண்சன் வீட்டு முன்புறம் சாக்கடை தண்ணீர் சாலையில் வடிந்து சுகாதார கேடு ஏற்படுவதால் ஓடை அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 181 - (2) தீர்மானிக்கப்பட்டது

3) சி.எஸ்.ஐ..மிஷன் மருத்துவமனை எதிர்புறம் சாலை ஓரத்தில் பொதுமக்களின் அத்தியாவசியத் தேவைகளை சந்திக்கும் பொருட்டு சிறுமின் விசை நீர்தேக்க தொட்டி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 181 - (3) தீர்மானிக்கப்பட்டது

4) மடத்துவிளை குளம் தூர்வாராமல் உள்ளது. அதனை தூர்வாரி அப்பகுதி மக்களுக்கு பயன்படும் வகையில் சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 181 - (4) தீர்மானிக்கப்பட்டது

16-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.K. இரத்தினமணி கொண்டு வரும் தீர்மானம்

1) குலசேகரம் ரோடு NTC டிப்போ முதல் புல்லுவிளை வரை வடிகால் ஓடை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 182 - (1) தீர்மானிக்கப்பட்டது

2) குலசேகரம் ரோட்டில் சாதிக் பழைய இரும்பு கடையில் இருந்து ரெத்தினராஜ் வீடுவரை உள்ள பகுதியில் வடிகால் ஓடை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 182 - (2) தீர்மானிக்கப்பட்டது

3) APJ நகர் அப்புகுட்டன் வீடு முதல் பால்சங்கர் வீடு வரை உள்ள மின் கம்பங்களில் CFL விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 182 - (3) தீர்மானிக்கப்பட்டது

4) குலசேகரம் ரோட்டில் Adv. சத்தியதாஸ் அவர்கள் வீட்டின் அருகில் உள்ள மின்கம்பத்தில் CFL விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 182 - (4) தீர்மானிக்கப்பட்டது

5) உரக்கிடங்கின் உள்பக்கத்தில் உள்ள மின்கம்பங்களில் CFL விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 182 - (5) தீர்மானிக்கப்பட்டது

6) குலசேகரம் ரோட்டில் இருந்து உரக்கிடங்கு செல்லும் வடிகால் ஒடை அருகில் காலியாக உள்ள பகுதியில் படிப்பகம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 182 - (6) தீர்மானிக்கப்பட்டது

7) N.T.C. டிப்போ பின்புறம் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணற்றில் இருந்து குழாய் அமைத்து A. சந்தோஷ்குமார் வீட்டின் அருகில் சின்டெக்ஸ் அமைத்து தண்ணீர் வசதி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 182 - (7) தீர்மானிக்கப்பட்டது

18-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.S.P. ஜலிலா ராணி கொண்டு வரும் தீர்மானம்

1) திரு. ஆனந்த தாஸ் அவர்கள் வீட்டின் முன் ஒரு தெருவிளக்கு பொருத்தி தரும்படி மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 183 - (1) தீர்மானிக்கப்பட்டது

2) திரு. ஜாண்சன் (பைன்டிங்) அவர்கள் வீட்டுக்கு போகும் வழியில் தெருவிளக்கு பொருத்தி தரும்படி மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 183 - (2) தீர்மானிக்கப்பட்டது

3) திரு. சாம் (காலம் சென்ற இஸ்ரவேல் மகன்) சிங்கிளேயர் தெரு வீட்டுக்கு செல்லும் சாலையில் பைப் லைன் போட்டுத்தரும்படி மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 183 - (3) தீர்மானிக்கப்பட்டது

20-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.M. சர்தார் ஷா கொண்டு வரும் தீர்மானம்

1) மார்த்தாண்டம் சந்தையின் பின்புறம் திரு.சுகுமாரன் (Raj & Co) என்பவருக்கு சொந்தமான சுமார் 1,500 சென்று நிலம் மார்க்கெட் மதிற்சுவரோடு சேர்ந்து வருகிறது வழிகாட்டு மதிப்புவிலைக்கு அனுமதி பெற்றுகையகப்படுத்தி சந்தையை விரிவுபடுத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 184 - (1) தீர்மானிக்கப்பட்டது

2) மார்த்தாண்டம் நாவுரிகாட்டுவிளை செல்வி அவர்கள் வீடு முதல் சுப்பிரமணியம் மற்றும் மோகனன் அவர்கள் வீடு வரை குடிநீர் சப்லைன் போட மன்றம்தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 184 - (2) தீர்மானிக்கப்பட்டது

3) மார்த்தாண்டம் திரு.செந்தில்குமார் அவர்கள் வீட்டின்முன் இருந்து திரு.மோகனன் மற்றும் திரு. இனங்கோ அவர்கள் வீடு வரை இன்டர்லாக் சாலை அமைக்க வேண்டி மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 184 - (3) தீர்மானிக்கப்பட்டது

21-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கே. செல்வகுமாரி. கொண்டு வரும் தீர்மானம்

1) பால்பண்ணை சாலையில் இருந்து நகராட்சி எல்கை முடிய உள்ள பகுதியில் வடிகால் ஒடை அமைக்க மன்ற தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 185 - (1) தீர்மானிக்கப்பட்டது

2) குலசேகரம் ரோட்டில் நகராட்சி எல்லை முடியும் இடத்தில் உள்ள மின்கம்பத்தில் CFL விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 185 - (2) தீர்மானிக்கப்பட்டது

3) சானல் ரோடு முதல் செல்லசுவாமி வீடு வரை வடிகால் ஒடை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்

மன்றத்தீர்மான எண். 185 - (1) தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண். 1</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5-ல் அமைந்துள்ள கழுவன்திட்டை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு எதிர்புறம் கழிவுநீர் தொட்டி அமைத்து அதிலிருந்து கழிவுநீரை 1HP Motor அமைத்து குழாய் மூலம் கழிவுநீரை வெளியேற்றும் பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண்.76, நாள் 29-0-2022 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 05-07-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றின் விவரம் கீழ்க்கண்டவாறு.

1) திரு.சி. சுரேஷ் மதிப்பீட்டை விட 0.01% குறைவு
2) திரு.எஸ். பாபு மதிப்பீட்டை விட 2.11% அதிகம்

இவ்விரு ஒப்பந்த புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக வழங்கிய திரு.சி. சுரேஷ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1207/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.186 தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண். 2</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பி.ஒ.சி.தெரு, முனிசாமி வளாகம், குழித்துறை வணிகவளாகம் ஆகிய பகுதிகளில் உள்ள கிணறுகளில் தூர் வாருதல் பணிக்கு ரூ.1,60,000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்றத் தீர்மானம் எண்.119, நாள் 20-05-2022-ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி

பணிக்கு 05-07-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றின் விவரம் கீழ்க்கண்டவாறு.

1) திரு.சி. சுரேஷ் மதிப்பீட்டை விட 2.14% அதிகம்

2) திரு.எஸ். பாபு மதிப்பீட்டை விட 0.05% குறைவு

இவ்விரு ஒப்பந்த புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.05% குறைவாக வழங்கிய திரு.எஸ். பாபு என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1412/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.187 தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 3

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5-ல் கிங்ஸ் ஆஸ்பத்திரி எதிரில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து எலக்ட்ரீசியன் அனி வீடு வரை குழாய் அமைத்து தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு ரூ.23,000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்றத் தீர்மானம் எண்.107, நாள் 20-05-2022-ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 05-07-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றின் விவரம் கீழ்க்கண்டவாறு.

1) திரு.சி. சுரேஷ் மதிப்பீட்டை விட 0.45% குறைவு
2) திரு.எஸ். பாபு மதிப்பீட்டை விட 3.05% அதிகம்

இவ்விரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.45% குறைவாக வழங்கிய திரு.சி. சுரேஷ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1415/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.188 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19-ல் அமைந்துள்ள Divines ஹோட்டல் அருகில் உள்ள கிணற்றில் கழிவுநீர் தொட்டி அமைத்து, கழிவு நீரை குழாய் மூலம் வெளியேற்ற ரூ.31,000/- மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.106, நாள் 20-05-2022-ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 05-07-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றின் விவரம் கீழ்க்கண்டவாறு.

1) திரு.சி. சுரேஷ் மதிப்பீட்டை விட 1.74% குறைவு
2) திரு.எஸ். பாபு மதிப்பீட்டை விட 1.34% குறைவு

இவ்விரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.74% குறைவாக வழங்கிய திரு.சி. சுரேஷ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1414/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.189 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சி அலுவலகத்தின் முன்பகுதியில் அமைந்துள்ள ஜெனரேட்டர் அறையை காவலர் அறையாக மாற்றி வர்ணம் பூசவும், தரையில் Tiles பதித்து பராமரிக்க ரூ.1,38,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்றத் தீர்மானம் எண்.88, நாள் 29-04-2022-ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 05-07-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றின் விவரம் கீழ்க்கண்டவாறு.

1) திரு.பி. ஜெயபிரகாஷ் மதிப்பீட்டை விட 0.07% குறைவு
2) திரு.பி. ஜெயசந்திரன் மதிப்பீட்டை விட 0.09% அதிகம்

இவ்விரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.07% குறைவாக வழங்கிய திரு.பி. ஜெயபிரகாஷ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1248/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.190 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.81, நாள் 29-04-2022-ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 05-07-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றின் விவரம் கீழ்க்கண்டவாறு.

1) திரு.சி. ராஜன் மதிப்பீட்டை விட 0.05% குறைவு
2) திரு.எஸ். பாபு மதிப்பீட்டை விட 12.64% அதிகம்

இவ்விரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.05% குறைவாக வழங்கிய திரு.சி. ராஜன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1241/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.191 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 7</u>

குழித்துறை நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள Computer-ரில் பழுது ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்ட காரணத்தினால் புதிய Mother board வாங்கி பொருத்திய வகையில் Ashwin Computers என்ற நிறுவனத்தின் மூலம் பட்டியல் தொகை ரூ.3500/- வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் தொகையினை அந்நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.866/2021/இ1.

மன்றத்தீர்மான எண்.192 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 8

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு வாகனம் TN.74Z.4605-க்கு 2022-2023-ம் ஆண்டிற்கான தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்யும் பொருட்டு வாகனம் ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு ரூ.64,562/- வரப்பெற்றுள்ளது. நகர்மன்றத் தீர்மானம் எண்.145, நாள் 14-06-2022-க்கு அனுமதிக்கப்பட்டது. மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான TVS Mobility Private limited என்ற நிறுவனம் மூலம் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1055/2013/இ1.

மன்றத்தீர்மான எண்.193 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 9

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் உள்ள அரசு விரைவு பேருந்து பதிவு அறை மிகவும் பழுதடைந்து உள்ளது. மேற்படி பழுதினை சரி செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.82,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1958/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.194 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 10

தமிழ்நாடு அரசாணை எண்.218, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 20-10-2008-ல் ஒப்புதல் வழங்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழ் எண்.218, நாள் NOV. 12th (Part VI Sec.-2) Page No.373-ல் பிரசுரித்து வெளியிடப்பட்ட குழித்துறை உள்ளூர் திட்டக்குழும பகுதிக்கான முழுமைத்திட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை நகராட்சி, விளவங்கோடு வட்டம், வார்டுA. Block-3, நகரளவை எண்.64 (பரப்பு 1260 சதுர மீட்டர்) ஆனது விவசாயப் பகுதியாக உத்தேசிக்கப்பட்டுள்ளதையும், நகரளவை எண்.69/4 (பரப்பு 271 சதுர

மீட்டர்) ஆனது வணிகப்பகுதியாக உத்தேசிக்கப்பட்டுள்ளதையும் நிறுவன உபயோகமாக (Institution Zone) மாற்றம் செய்து தருமாறு டாக்டர் ஷீபா ஜெயலால், தலைவர் ஆஸ்டின் மெமோரியல் சாரிடபுள் அன்ட் எஜீகேஷனல் டிரஸ்ட், குழித்துறை என்பவரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி நிலபயன்மாற்றம் தொடர்பாக .Afternoor English daily நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் ரூ.13608/- மற்றும் daily thanthi நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் ரூ.8946/- என மொத்தம் ரூ.22554/- வழங்க வேண்டி உள்து. இத்தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1233/2022/ந.அ.ஆ.

மன்றத்தீர்மான எண்.195 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 11</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் மற்றும் வெட்டுவெந்நி மீன்சந்தையில் உள்ள மீன்கழிவுகள் மற்றும் மாமிச கழிவுகளை சுகாதார முறையில் மறு சுழற்சி செய்ய M/S.K amd D Company, 13-198 கெடுத்தறவிளை, காப்புக்காடு என்றும் நிறுவனம் முன்வந்துள்ளது. மேலும் நகராட்சியில் இருந்து அப்புறப்படுத்தும் மீன் மற்றும் மாமிச கழிவுகளுக்கு கிலோ 1-க்கு ரூ.1/- (ஒன்று) மட்டும் நகராட்சி கருவூலத்தில் செலுத்த முன்வந்துள்ளது. எனவே மேற்கண்ட கம்பெனிக்கு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1895/2022/H1.

மன்றத்தீர்மான எண்.196 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 12</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தெருவிளக்கு பராமரிப்பில் உள்ள 133 எண்ணம் On Off Switch மற்றும் Switch Box ஆகியவை பழுதடைந்துள்ளதால் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் செய்திட இயலவில்லை. எனவே 133 எண்ணம் On Off Switch with Box மாற்றம் செய்திட உத்தேச மதிப்பீடு ரூ.8,10,000/- (ரூபாய்

எட்டு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி இப்பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.3090/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.197 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 13</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.4 நரியன்விளை சாலையில் இருபுறம் மழைநீர் வடிகால் பழுது ஏற்பட்டு நீர்தேங்கி சுகாதாரகேடு விளையும் வகையில் உள்ளது. எனவே அப்பணியின் அவசியம் அவசரம் கருதி பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.4,60,000/- (ரூபாய் நான்கு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி இப்பணியினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.3084/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.198 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 14</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11-ல் டாக்டர் காவேரி கண்ணன் வீடு முதல் காஞ்சினிகடவு வரை உள்ள மழைநீர் வடிகால் மிகவும் பழுதடைந்து உள்ளது. இதனால் பொதுமக்களுக்கு சுகாதாரக்கேடு விளைவிக்கும் வண்ணம் உள்ளது. மேற்படி மழைநீர் வடிகால் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.6.20 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை நகராட்சியின் வருவாய் நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். 3167/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.199 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 15</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.12-ல் கண்ணக்கோடு பாறைகடவு சாலை ஆர்.சி.செர்ச் முதல் சப்பாத்து வரை உள்ள கான்கிரீட் சாலை மிகவும் பழுதடைந்து சப்பாத்துக்கு பொதுமக்கள் செல்ல மிகவும் சிரமமாகயுள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட சாலையை சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.6,00,000/- (ரூபாய் ஆறு லட்சம்) தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.**3087/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.200 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 16</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.13 பன்னியானி சாலையில் பன்னியானி முதல் சர்ச் வரை உள்ள சாலையில் மழைநீர் வடிகால் இல்லாத காரணத்தினால் கழிவுநீர் சாலையில் தேங்கி சுகாதார கேடு விளைவிக்கும் வண்ணம் உள்ளது. மேலும் அச்சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. அச்சாலை கான்கிரீட் தளமாக சீரமைக்கவும் மழைநீர் வடிகால் அமைக்கவும் உத்தேச மதிப்பீடு ரூ.7,00,000/- (ரூபாய் எழு லட்சம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.**3056/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.201 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 17</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.14 வடக்குத்தெரு சாலையில் வடக்கு சாலை சந்திப்பு முதல் கான்வென்ட் பள்ளி வரையில் உள்ள சாலையில் இருபுறமும் உள்ள மழைநீர் வடிகால் பழுது ஏற்பட்டுள்ளது. மேலும் குடிநீர் திட்ட பணிகள் காரணமாக அச்சாலையும் பழுதடைந்துள்ளது. மேற்கண்ட சாலையின் இருபுறமும் மழைநீர் வடிகால் அமைக்கவும் அச்சாலையை கான்கிரீட் தளமாக சீரமைக்கவும் உத்தேச மதிப்பீடு ரூ.9.40 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இப்பணியினை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3089/2022/இ1

. மன்றத்தீர்மான எண்.202 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 18

குழித்துறை நகராட்சி வார்டு எண்.20 ஆர்.சி.தெருவில் சப்பரஅறையின் அருகில் உள்ள மழைநீர் வடிகால் பழுது ஏற்பட்டு கழிவுநீர் செல்ல இயலாமல் தேங்கி கிடந்து சுகாதார சீர்கேடு விளைவிக்கும் நிலை உருவாகியுள்ளது. எனவே பொதுநலன் கருதி மேற்கண்ட வடிகால் பழுது பார்க்க உத்தேச மதிப்பீடு ரூ.1,00,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3095/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.203 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 19

குழித்துறை நகராட்சி வார்டு எண்.16 குலசேகரம் சாலையில் குலசேகரம் சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலை சந்திப்பிலிருந்து காவல் நிலையம் வரையில் மழைநீர் வடிகால் இல்லாத காரணத்தினால் மழைகாலங்களில் தேசிய நெடுஞ்சாலையில் ஏற்படும் வெள்ள பெருக்கானது குலசேகரம் சாலை வழியாக வீடுகளுக்கு புகும் அபாயம் உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் மழைநீர் வடிகால் அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி இப்பணியினை மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.9,40,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) ஆகும். மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.3083/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.204 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 20

குழித்துறை நகராட்சி வார்டு எண்.21 உண்ணாமலைக்கடை சாலையில் பால்பண்ணை முதல் நகராட்சி எல்லை வரை மழைநீர் வடிகால் இல்லாத காரணத்தினால் மழைகாலங்களில் சாலைகளில் நீர் பெருக்கெடுத்து வீடுகளுக்குள் புகும் அபாயம் உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் பொதுமக்கள் நலன் கருதி மழைநீர் வடிகால் அமைக்க வேண்டியதன் அவசியம் கருதி உத்தேச மதிப்பீடு ரூ.5.80 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3086/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.205 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 21

குழித்துறை நகராட்சி அலுவலகம் உள் மற்றும் வெளிப்பகுதியில் வர்ணம் பூசவும் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் உத்தேச மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3088/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.206 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 22

குழித்துறை நகராட்சி ஓராண்டு சாதனை 2021-2022 திட்டப்பணிகள் குறித்து தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகையில் பட்டியல் தொகை ரூ.29,820/- பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1379/2019/இ1.

மன்றத்தீர்மான எண்.207 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 23

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார வாகனம் TN.75.J.8227-க்கு 2022-2023-ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்திலுள்ள பழுதுகளை சரி செய்ய 13-07-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு.

1) Akshaya Motors, உண்ணாமலைக்கடை. மதிப்பீட்டை விட 0.51% குறைவு (ரூ.97500.00)
2) Mathava Motors வெள்ளமடம். மதிப்பீட்டை விட 1.02% அதிகம் (ரூ.99000.00)

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.51% குறைவாக கொடுத்துள்ள Akshaya Motors உண்ணாமலைக்கடை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- பொதுசுகாதார அத்தியாவசிய அவசரத்தினை முன்னிட்டு நகர்மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய வரிசை எண்.1-ல் காணும் Akshaya Motors என்ற நிறுவனத்தின் பணி ஆணை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்,
ந.க.எண்.2778/2012/இ1.

மன்றத்தீர்மான எண்.208 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 24

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15-ல் அமைந்துள்ள அட்டகுளம் சாலையின் எதிர்புறம் உள்ள நடைபாதை மிகவும் பழுதடைந்து கழிவுநீர் பாதையின் வழியாக வழிந்து பொதுமக்களுக்கு சுகாதாரகேடு விளைவிக்கும் நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட நடைபாதையில் மழைநீர் வடிகால் அமைத்து கான்கிரீட் தளம் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.3,70,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி இப்பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.3110/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.209 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 25</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 தேவிகுமாரி கல்லூரி சாலையின் இருபுறத்தில் மழைநீர் வடிகால் இல்லாததால் மழைகாலங்களில் மழைநீர் எதிர்புறம் உள்ள வீடுகளுக்கு செல்லும் அபாயம் உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் மழைநீர் வடிகால் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.4,00,000/- (ரூபாய் நான்கு இலட்சத்து மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி இப்பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.**3111/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.210 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 26</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் கருங்கல் சாலை வார்டு எண்.20 சர்வே எண்.D12/82-ல் தினசரி காய்கறி சந்தை கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் தினசரி செய்தி நாளிதழில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் விளம்பரம் செய்யப்பட்ட வகையில் ரூ.47,303/- MCS Communication Private Limiter என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.**1967/2021/இ1.

மன்றத்தீர்மான எண்.211 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 27</u>

97-வது வாவுபலி பொருட்காட்சி 13-07-2022 முதல் 01-08-2022 வரை நடைபெறுவதால் குழித்துறை பாலம் முதல் திருத்துவபுரம் வரையுள்ள சாலையின் இருபுறமும் உள்ள மண்மேடுகள் மற்றும் புதர்மண்டிகளை J.C.B. வாகனத்தை பயன்படுத்தி அப்புறப்படுத்தவும் அதற்காகும் செலவினம் ரூ.30,000/-த்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணியினை செய்து முடித்தமைக்கும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1950/2022/H1

மன்றத்தீர்மான எண்.212 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 28</u>

இந்நகராட்சி பகுதியில் தினசரி உருவாகும் திடக்கழிவுகளில் உலர்கழிவுகள் தனியாக பிரித்து எடுக்கப்பட்டு மறுசுழற்சிக்கு பயன்படுத்த முடியாத பிளாஸ்டிக் கழிவுகள் நகராட்சி பராமரிப்பிலுள்ள நுண்ணுயிர் உரக்கிடங்கின் அருகாமையில் உள்ள பகுதியில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. மேற்படி பிளாஸ்டிக் கழிவுகளை Papermen Company என்ற நிறுவனம் 17-03-2022 வரை எடுத்து சென்றார்கள். 18-03-2022 முதல் தற்போது வரை சுமார் 4 மாதங்களாக மேற்படி கழிவுகளை எடுத்து செல்லவில்லை. மேற்படி நிறுவனத்திற்கு அலைபேசியில் தொடர்பு கொண்டும் இதுநாள் வரை பிளாஸ்டிக் கழிவுகளை எடுக்க முன்வரவில்லை. அலைபேசி இணைப்பினையும் எடுக்கவில்லை.

இந்நிலையில் மேற்படி நுண்ணுயிர் உரமையத்தின் அருகில் உள்ள பிளாஸ்டிக் சேகரிப்பு மையம் முழுவதும் நிரம்பி, மீன்மார்க்கெட் வெளிப்புறமும் பிளாஸ்டிக் கழிவுகளை சேமித்து வைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 22-06-2022 அன்று வரப்பெற்ற பத்திரிக்கை செய்தியினை சுட்டிக்காட்டி பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கும் பிளாஸ்டிக்கழிவுகளை உடன் அப்புறப்படுத்த அலைபேசியில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

எனவே மேற்படி பிளாஸ்டிக் கழிவுகளை அப்புறப்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.55000/-ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- பொதுமக்களின் நலன் கருதியும், பொது சுகாதார அத்தியாவசிய அவசரத்தினை கருதி மேற்படி பிளாஸ்டிக் கழிவுகளை அப்புறப்படுத்த ஆகும் செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1151/2017/அ2

மன்றத்தீர்மான எண்.213 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 29

குழித்துறை நகராட்சி பகுதியில் வீடுகளில் இருந்து சேகரிக்கப்படும் பயோமெடிக்கல் கழிவுகள் மற்றும் பேம்பர்ஸ் ஆகியவற்றை பிரித்து அப்புறப்படுத்தியமைக்கு, Aseptic Systems Bio Medical Waste Management Company, திருநெல்வேலி என்ற நிறுவனத்திற்கு 01-07-2020 முதல் 31-05-2022 வரையில் ரூ.1,61,384/- வழங்கிட கேட்டு செலவினப்பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை அந்நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் 2022-2023-ம் நிதி ஆண்டிற்கு பயோமெடிக்கல் கழிவுகளை அப்புறப்படுத்திட ஏற்படும் செலவினை உத்தேச ரூ.1,00,000/- நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.19/2019/H1.

மன்றத்தீர்மான எண்.214 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 30

கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் நாகர்கோவில் அவர்களின் கடிதம் எண்.4381/MKG/2022, நாள் 20-05-2022-ல் மார்த்தாண்டம் பேருந்து நிலைய பகுதியில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ஆவின் பாலகம் அமைத்திட 10x10 அளவில் இடம் ஒதுக்கீடு செய்து வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க நகரமைப்பு ஆய்வாளரின் 19-07-2022-ம் நாளிட்ட அறிக்கையில் பேருந்து நிலையத்தில் பேருந்துகள் வெளியே வரும் பகுதியில் வலதுபுறம் பயன்படாத நிலையில் உள்ள ஷெட் உள்ள இடத்தில் ஆவின் பாலகம் அமைத்திட இடம் ஒதுக்கீடு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி இடத்தினை ஒதுக்கீடு செய்து வழங்கவும் அதற்குரிய மாத வாடகை நிர்ணயம் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதித்து முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3098/2022/ந.அ.ஆ.

மன்றத்தீர்மான எண்.215 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 31

குழித்துறை நகராட்சி பராமரிப்பில் உள்ள கணிணிகள் மற்றும் பிரிண்டர்கள் மற்றும் கணிணி பொருட்கள் 2022-2023-ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்திட (கணிணிகள் -21 எண்ணம், லேப்டாப் - 3 எண்ணம், HP Laser Jet Printer - 9 எண்ணம், Dot Matrix Printer - 2 எண்ணம்) ரூ.97,000/-க்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. 2022-2023-ம் ஆண்டிற்கான பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. - மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.866/2021/இ1.

மன்றத்தீர்மான எண்.216 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 32

75-வது சுதந்திர தினவிழா கொண்டாட்டத்தை முன்னிட்டு அனைத்து குடியிருப்புகளிலும் தேசியக்கொடி எற்ற வேண்டும் என்ற அரசு தலைமை செயலாளர் அவர்களின் ந.க.எண்.2425/C2/2021-15, நாள் 27-05-2022-ன் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே அதன்படி மூவர்ணக்கொடி அனைத்து வீடுகளிலும் (6416 எண்ணிக்கை) ஏற்றும் வண்ணம் மூவர்ணக்கொடி உள்ளிட்ட பொருட்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம் ஆகும். பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி இப்பணியினை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. - மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.3149/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.217 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 33

குழித்துறை நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள கழிப்பறை பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.1.90 லட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.173, நாள் 30-06-2022-ன்படி அனுமதி பெற்று 21-07-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி

கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றின் விவரம் கீழ்க்கண்டவாறு.

1) திரு.எஸ். பாபு மதிப்பீட்டை விட 0.05% குறைவு
2) திரு.சி. சுரேஷ் மதிப்பீட்டை விட 0.55% அதிகம்

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ். பாபு என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
**ந.க.எண்.**1729/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.218 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 34</u>

குழித்துறை நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் சில சரியாக இயங்காத நிலையில் உள்ள காரணத்தினால் அலுவலக பணியாளரின் குறிப்பின்படி புதிய கணினி - 4 எண்ணம், Xerox Machine 2 எண்ணம், Dot Matrix Printer - 1 எண்ணம், Laser Printer - 4 எண்ணம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.4,50,000/- (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கணினி மற்றும் பிரிண்டர்கள் வாங்குவதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
**ந.க.எண்.**3040/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.219 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 35</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.5 கழுவன்திட்டை சாலையில் சியோன் சர்ச் எதிர்புறம் உள்ள நடைபாதையில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் சிறுபாலம் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.65,000/- (ரூபாய் அறுபத்தைந்தாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.3150/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.220 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 36</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள சாலையோர வியாபாரிகள் கணக்கெடுத்தல் மற்றும் அடையாள அட்டை வழங்குதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.20789/2021/UPA1, நாள் 16-06-2022 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ந.க.எண்.2165/2022/B3, நாள் 17-06-2022-ன் மூலம் பரிந்துரை செய்யப்பட்டதின் அடிப்படையில் மேற்படி பணிக்கு 15-07-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றின் விவரம் கீழ்கண்டவாறு.

1) Bharathi H.R. Consoltancy, Coimbatore
2) Mirifical carrers P.V.T. Ltd. Coimbatore

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை தொழில்நுட்ப ரீதியாக கூர்ந்தாய்வு செய்ததில் Mirifical carrers P.V.T. Ltd. Coimbatore மட்டுமே தகுதியுடையதாக உள்ள காரணத்தினால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி 18-07-2022 அன்று திறக்கப்பட்டதில் Mirifical carrers P.V.T. Ltd. Coimbatore அவர்கள் ஒரு Street Venders Survey-க்கான செலவினம் ரூ.700/- என குறிப்பிட்டுள்ளார். எனவே விலை குறைப்பு செய்ய கேட்டதற்கிணங்க ரூ.700/-லிருந்து ரூ.650/- ஆக குறைத்து ஒப்பந்ததாரர் வழங்கியுள்ளார். மேற்படி இப்பணியினை Mirifical carrers P.V.T. Ltd. Coimbatore நிறுவனத்திடம் வழங்க மன்ற அனுமதிக்கு.

அ.கு.- 1) மன்றம் அனுமதி வழங்கலாம்
2) பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1818/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.221 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 37</u>

குழித்துறை நகராட்சி வி.எல்.சி மைதானம் மற்றும் வெட்டுமணி சப்பாத்து மோட்டார் அறை அருகில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள Filter media புயல் வெள்ளத்தின் காரணமாக மண் புதைந்து மழைநீர் வடிகால் உள்ளே கழிவுநீர் சரியாக சுத்திகரிக்கப்படாமல் தேங்கி நின்று சுகாதாரக்கேடு விளைவிக்கும் வண்ணம் உ.ள்ளது. எனவே சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள பழைய கற்கள் (Filter media) அப்புறப்படுத்தப்பட்டு புதியதாக உள்ளே metal நிரப்ப வேண்டியுள்ளது. மேற்கண்ட சுத்திகரிப்பு நிலையம் பராமரிப்பு பணி மற்றும் Filter media மாற்றுவதற்கும் உத்தேச மதிப்பீடு ரூ.75000/- மேற்படி பணியினை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.3040/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.222 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.38</u>

குழித்துறை நகராட்சி பராமரிப்பில் உள்ள மார்த்தாண்டம் மீன்சந்தையில் குத்தகை உரிமம் 1-4-2022 முதல் 31-03-2023 முடியவுள்ள காலத்தில் பொது ஏலம் கோரிய போது திரு. உதயகுமார் என்பவர் மட்டும் கலந்து கொண்டு ரூ.60,00,000/-க்கு உரிமம் எடுத்து கொள்வதாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். நகர்மன்ற தீர்மானம் எண்.55, நாள் 11-04-2022-ல் மார்த்தாண்டம் காய்கறி சந்தையில் புதிய கட்டுமானங்கள் நடைபெற உள்ள நிலையில் லாறிபேட்டையில் தற்காலிக கடைகள் அமைத்து கொள்வதால் மீன் சந்தை ஏலத்தினை ஒப்பு கொள்ளாத நிலையில் நடவடிக்கை தொடர இயலவில்லை. லாறிபேட்டையில் காய்கறி சந்தை அமைத்திட மாற்று ஏற்பாடு செய்யப்படும் வரையில் துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்பேரில் கீழ்கண்டவாறு வசூல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 2022 ஏப்ரல் மாத வசூல் | - ரூ. 517810 |
| 2022 மே மாத வசூல் | - ரூ. 521020 |
| 2022 ஜீன் மாத வசூல் | - ரூ. 465730 |
| 2022 ஜீலை மாத வசூல் 20-07-2022 வரை | - ரூ. 290450 |
| | ---------------------- |
| மொத்தம் | - ரூ.1795010 |
| | ---------------------- |

மேற்படி இனத்திற்கு 2021-2022-ம் ஆண்டில் பொது ஏலத்தில் ரூ.11138591/-க்கு உரிமம் ஒப்படைக்கப்பட்டது. துறைமூலம் வசூல் செய்யப்பட்ட நான்கு மாத தொகை ரூ.1795010/- ஆகும். இதன் அடிப்படையில் ஒராண்டிற்கான வசூல் தொகையினை கணக்கீடு செய்யும் பட்சத்தில் உத்தேசமாக ரூ.5385030/- வருவாய் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. இதற்காக நகராட்சி வசூல் பணியாளர்கள் பணிக்கப்பட்டு வசூல் பணி மேற்கொண்டு வருகிறார்கள். இந்நகராட்சியில் வரிவசூல் பணியாளர்கள் மேற்படி பணியினை மேற்கொள்வதால் வரி மற்றும் வரியில்லா இனங்களில் வரிவசூல் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. மேலும் மீன்சந்தை வசூல் பணிக்காக ரசீது புத்தகங்கள் அச்சிடப்பட்ட வகையிலும் உத்தேசமாக ரூ.50,000/- செலவு மேற்கொள்ளப்பட வேண்டிய நிலை உள்ளது. இதனால் 2021-2022-ம் ஆண்டு ஏலத்தொகைக்கும் துறைமூலம் வசூல் செய்யப்படும் தொகைக்கும் சுமார் ரூ.50,00,000/- வித்தியாசம் ஏற்பட வாய்ப்புள்ளது. அவ்வாறு நிதியிழப்பு ஏற்படும் பட்சத்தில் உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையால் வரும் காலங்களில் தணிக்கை மேற்கொள்ளும் போது தணிக்கை அறிக்கையில் தடை எழுப்ப வாய்ப்புள்ளது.

எனவே மார்த்தாண்டம் காய்கறி சந்தையில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள் நடவடிக்கை தொடரப்படும் வரையில் மார்த்தாண்டம் நவீன மீன் சந்தை மற்றும் லாறிபேட்டையில் மீன் வாகனங்களுக்குரிய குத்தகை உரிமத்தினை 01-08-2022 முதல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு.- நகராட்சிக்கு ஏற்படும் பெரும் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு ஏல நடவடிக்கை தொடர்ந்து உரிமம் ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 3066/2021/அ2.**

மன்றத்தீர்மான எண்.223, 11-04-2022-ம் நாள் நடைபெற்ற அவசர கூட்டத்தில் பொருள் எண்.7 தீர்மான எண்.55 நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினை நடைமுறைபடுத்த மன்றம் தீர்மானிக்கிறது. மேலும் தீர்மான எண்.223, பொருள் எண்.38 அனுமதி மறுக்கப்படுகிறது.

<u>பொருள் எண்.39</u>

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் 14-06-2022 அன்று நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் நகர் பகுதியில் உள்ள கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழிகளை பறிமுதல் செய்து அபராதம் விதிப்பதுடன் நெகிழி இல்லா நகரை உருவாக்க நகரின் முக்கிய பகுதிகளில் விளம்பர பதாதைகள் வைக்க அறிவுறுத்தியுள்ளார்கள்.

எனவே நகரின் முக்கிய பகுதிகளில் “பிளாஸ்டிக் இல்லா நகரம்” என்ற விளம்பர பதாகைகள் (பேனர்கள்) வைக்கவும், நகரில் குப்பைகள் போடும் பொது இடங்களில் குப்பை கொட்டக்கூடாது என விளம்பர பேனர்கள் வைக்கவும் உத்தேச செலவினம் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
**ந.க.எண்.**1151/2017/H1.

மன்றத்தீர்மான எண்.224 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 40</u>

குழித்துறை நகராட்சி அலுவலக பொறியாளர் பிரிவு பொறியாளர் அறையில் பயன்பாட்டில் உள்ள A.c பயன்படுத்த முடியாத காரணத்தினால் Ever cool engineers திருத்துவபுரம் என்ற நிறுவனத்தின் மூலம் பழுதுகளை நீக்கம் செய்யப்பட்ட வகையில் பட்டியல் தொகை ரூபாய் 2300 வரப்பெற்றுள்ளது. மேற்படி வரபெற்ற பட்டியல் தொகையினை Ever cool engineers என்ற நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
**ந.க.எண்.**2017/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.225 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.41</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.16 கீழ்பம்மம் முதல் APJ Nager செல்லும் சாலையில் உள்ள மழைநீர் வடிகால் சுவர் இடிந்து சாலையில் பழுது ஏற்பட்டு போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் வடிகால் தடுப்பு சுவர் சரி செய்ய மதிப்பீடு ரூ.30,000/- (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி இப்பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
**ந.க.எண்.** 3166/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.226 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 42</u>

குழித்துறை நகராட்சி அலுவலக பயன்பாட்டிலுள்ள கீழ்கண்ட எழுது பொருட்கள் காலியான நிலையில் உள்ள காரணத்தால் அவசரம் கருதி கூட்டுறவு அச்சகம் மூலம் பெறுவதற்கும் அதற்கான செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1) A4 Paper - 100 Reem
2) Receipts Book - 10 Nos.
3) Ink Pad - 25 Nos.
4) Post Cover Small Size - 1000 Nos.
5) Post Cover Long Size - 1000 Nos.
6) Stapler Small Size - 20 Nos.
7) Stapler Pin Small Size - 10 Nos.
8) Receipt Bill - 25000 Nos.
9) Shop Big Staplar - 10 Nos.
10) D.V.D. (Sony) - 1 Box
11) Distribution Register - 10 Nos.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.180/2007/டி2.

மன்றத்தீர்மான எண்.227 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 43</u>

குழித்துறை நகராட்சியில் வார்டு எண்.6-ல் அமைந்துள்ள வேலுத்தம்பி திடலில் வருகின்ற ஆகஸ்ட் 15-ம் தேதி 75-வது சுதந்திர தினவிழாவினை முன்னிட்டு சுதந்திரதின Logo (சின்னம்) ஒன்றினை அமைத்து அழகுபடுத்த நகர்மன்ற தலைவர் அவர்களின் ஆலோசனையின்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சம் ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.3165/2022/இ1.
மன்றத்தீர்மான எண்.228 அனுமதிக்கப்பட்டது

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி
நகர் மன்ற தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.